DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

**OS.No : 89/2013 PW : 4**

Name : தியாகராஜன் Age -

Father's Name Village

Taluk Caste

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 28.11.2022

**முதல் விசாரணை**

நான் திருவள்ளூர் டி.டி.சி.பி (நகர் ஊரக அமைப்புத்துறை) யில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இணை இயக்குநரிடம் கொடுத்த கடிதத்தை தாக்கல் செய்கிறேன். அது சாட்சிசாஆ.3, சர்வே எண்.503/2, 503/3பி சம்பந்தப்பட்ட டி.டி.சி.பி அப்புரூவல் பிளான் எங்கள் அலுவலகத்தில் இல்லை. அப்புரூவல் பிளான் பெறுவதற்கு மொத்த இடத்தில் 10 சதவீதம் பூங்காவிற்காக ஒதுக்க வேண்டும். சாசாஆ3ல் 35 சதவீதம் ஒதுக்கப்பட்டதாக இருக்கிறது. அதை எப்படி ஒதுக்கினார்கள் என்று எனக்கு தெரியாது. அங்கீகரிக்கப்படாத மனை பிரிவிற்கு தற்போது அங்கீகாரம் வழங்கும் போது பூங்காவிற்கு 10 சதவீதம் ஒதுக்கினால் போதும்.

**குறுக்கு விசாரணை 14 முதல் 16 வரை இல்லை என்று சொல்லப்பட்டது.**

**குறுக்கு விசாரணை...(11, 12 பிரதிவாதிகள் தரப்பில்)**

சர்வே எண்.503/2 மற்றும் 3பி 22.11.1982ஆம் வருடமே அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவுகளாகும். அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் பொது உபயோகத்திற்கான

இடத்தை நகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்போம் என்று கேட்டால் ஆவணத்தை பார்த்து தான் சொல்ல முடியும். நான் 34 வருடமாக டி.டி.சி.பி-யில் வேலை பார்க்கிறேன். பொதுவாக அங்கீகாரம் கொடுக்கும் முன்னர் உபயோகத்திற்கான இடத்தை நகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்போம். சொத்தின் உரிமையாளர் பெயருக்கு அங்கீகாரம் கொடுப்போம். பொது உபயோகத்திற்கான இடம் உள்ளாட்சி துறையிடம் ஒப்படைக்கப்படும். பார்க் மற்றும் ரோடு உள்ளாட்சி துறையிடம் ஒப்படைக்கப்படும். சாசாஆ3ல் 28,700 சதுர அடி பூங்கா மற்றும் சாலைக்கு ஒதுக்கப்பட்டதா என்று கேட்டால் அது பூங்காவிற்கு ஒதுக்கப்பட்டது.

**3, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் முறையீடு இல்லாததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.**

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.